# இனவரைவியல்: கருத்தாக்கமும் செயல்முறையும்

**பெ.தமிழ் ஒளி***

*கட்டுரைச்சுருக்கம்: சமூக மானிடவியலில் ஆரம்ப காலத்தில் எழுதிய இனவரைவியல் நூல்களே இவ்வறிவுப்புலத்திற்கு ஒரு வலுவான அடித்தளமாய் அமைந்தது. இனவரைவியல் ஒரு சமூகம் குறித்து முழுதளாவிய பார்வையுடன் அச்சமூகப் பண்பாடு வாழ்க்கைமுறை குறித்து ஆய்வாளர் எவ்வித தற்சார்புமின்றி விவரிப்பு, விளக்கங்களுடன் உரையாக்கம் செய்வது. இந்தியாவில் இனவரைவியல் ஆய்வு 19 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய காலனி அரசுகள் இங்கு உள்ள சமூகங்களைப் புரிந்துகொள்ள ஆவணப்படுத்துவதில் தொடங்கியது. இந்திய விடுதலைக்குப் பின் மானிடவியலாளர்கள் இந்திய கிராம வாழ்க்கை குறித்து எழுதுவதில் ஆர்வம் காட்டினர். 20ஆம் நூற்றாண்டின் அறிவுத்தளத்தில் பெரும் மாற்றங்களை உருவாக்கிய பின் நவீனத்துவம் இனவரைவியல் எழுத்துக்களிலிலும் அதன் தாக்கத்தை உண்டாக்கியது. அண்மைக் காலங்களில் பிறதுறைகளிலும், மெய்நிகர் உலகிலும் இனவரைவியல் ஆய்வுகள் பயன்படுத்தப்படுகிறது. துறை இடை ஆய்வின் மூலம் புதிய தளங்கள், வடிவங்கள் என இனவரைவியல் ஆய்வு வளர்ந்து கொண்டிருக்கிறது. தமிழ்ச் சூழலில் சமூகப் பண்பாட்டுப் பன்மையத்தினை பதிவுசெய்யும் வகையில் இனவரைவியல் நூல்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இனவரைவியல் பற்றிய தெளிவும், அறிவும், ஈடுபாடும் தமிழ்ச் சூழலில் சீரிய முயற்சிகள் மேற்கொள்ளவும் இங்கு நிலவும் சமூகப் பண்பாட்டு பன்மைத்துவத்தை புரிந்து கொள்வதற்கான கருத்தாக்கங்களையும், கோட்பாட்டையும் வளர்த்தெடுக்க வழி வகுக்கும்*

## தொடக்கவுரை

தமிழ் ஆய்வுலகில் கடந்த சில ஆண்டுகளாக வெவ்வேறு சமூகங்கள் குறித்து தமிழில் இனவரைவியல் (Ethnography) அல்லது இனக்குழு வரைவியல் நூல்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இது தமிழ் சமூகத்தில் நிலவும் பண்பாட்டுப் பன்மையத்தினைப் (cultural diversity) பதிவிடும் ஒரு செயலாகவும், குறிப்பிட்ட ஒரு சமூகப் வாழ்க்கைமுறை

* சமூக மானிடவியலாளர், மின்னஞ்சல்: Thamizoli@hotmail.com

குறித்த ஆழமான புரிதல் பெற மேற்கொண்ட முயற்சியாகவும் கருதலாம். இதனால் பொதுச் சமூகத்தில் பண்பாட்டுப் பன்மையம் குறித்த புரிதலும், அறிதலும், அதற்கானத் தேவையும் கூடும் என நம்பலாம். மேலும் இனவரைவியல் ஒரு சமூகத்தின் தனிப்பட்ட அடையாளங்களையும், சமூக நடத்தைகளுக்குள் மறைந்திருக்கும் உள்ளார்ந்த பொருண்மைகளையும், சமூகங்களிடையே நிலவும் வேற்றுமை/ஒற்றுமைகளையும் அறிந்து கொள்வதற்கான வாய்ப்புகளையும் உருவாக்குகிறது. பண்பாட்டு பன்மையம் என்பது முக்கியமாகப் பாதுகாக்கப்பட வேண்டியதும் போற்றப்பட வேண்டியதும் ஆகும், ரூத் பெனடிக்ட் (Ruth Benedict, *1887 - 1948)* என்கிற அமெரிக்கப் பெண் மானிடவியலாளர் ‘மானிடவியல் என்கிற கல்விப்புலத்தின் குறிக்கோளே, இவ்வுலகினை பண்பாட்டு வேற்றுமைகளைக் காப்பதற்கான உலகமாக உருவாக்குவதுதான்’ என்று குறிப்பிடுகிறார்.

இனவரைவியல் என்பது சமூக மானிடவியலின் ஒரு மூலக் கருத்தாக்கம். இனவரைவியல் குறிப்புகளும், கட்டுரைகளும் ஆய்வு நூல்களுமே மானிடவியல் என்கிற அறிவுப்புலத்தின் ஆரம்பகால வளர்ச்சிக்கு ஒரு வலுவான அடித்தளத்தையும், அவ்வறிவுப்புலத்திற்கான தனித்துவம், அடையாளம் ஆகியவற்றையும் பெற்றுத்தந்தன. இனவரைவியல் என்பது ஒரு சமூகப் பண்பாடு அல்லது இனக்குழு பற்றி எழுதப்படும் நம்பகமான விளக்கவுரை ஆகும், அதை வாசிப்பவருக்கு அச்சமூக வாழ்க்கைமுறையினை தெளிவாக, நுட்பமாக கண் முன் கொண்டு நிறுத்துகிறது. இனவரைவியல் என்பது ஒரு சமூக யதார்த்தத்தை சமூகப் பிரதியாகவும் உருவாக்குகிறது.

அடுத்து தெரிந்துகொள்ளவேண்டியது இனவரைவியல் என்கிற சொல் மானிடவியல் மற்றும் பிற சமூக அறிவுப்புலங்களில் சூழலுக்கேற்ப பல பொருள்களில் பயன்படுத்தப்படுகிறது. முதலாவது இது ஒரு கருத்தாக்கம் (concept), இனவரைவியல் என்பது ஒரு குறிப்பிட்ட சமூகம் குறித்த சூழல், அதன் பண்பாட்டுக்கூறுகள், சமூக நிறுவனங்கள், சமூக அமைப்பு, குடும்பம் எனும் நடைமுறை, திருமணம், வழிபாடு, சடங்குகள், வாரிசுரிமை போன்ற செயல்முறைகள், சமூக நிகழ்வுகள் இவற்றில் மறைந்திருக்கும்

பொருள்கள் குறித்துப் பேசுவது. இரண்டாவதாக, மேற்கண்ட கருத்தாக்கத்தின்படி ஒரு சமூகப் பண்பாடு பற்றி முழுதளாவியப் பார்வையுடன் எழுதப்படும் ஒரு எழுத்து வகை (genre). மூன்றாவது ஒரு ஆய்வு முறையாக (method) மானிடவியல், சமூகவியல், உளவியல், புவியியல் போன்ற அறிவுப்புலங்களில் களஆய்வில் அப்பண்பாடு குறித்த பண்பறித் தரவுகள் (qualitative data) சேகரிக்கப் பயன்படுத்துவது. இனவரைவியல் என்பது ஒரு ஆய்வாளர் தன்னுடைய சமூகத்தினையன்றி மற்றொரு சமூகத்தின் பண்பாட்டு வாழ்க்கைமுறை குறித்து அக்குறிப்பிட்ட பண்பாட்டுச் சூழலுக்குள் தகுந்த ஆய்வுமுறைகளை பயன்படுத்தி தரவுகளை சேகரித்து விவரித்து எழுதுவது. ஒரு ஆய்வாளர் தனது நீண்ட கால சொந்த அனுபவத்தின் மூலம் களத்தில் தான் கவனித்ததை, பார்த்ததை, கேட்டதை, அறிந்து கொண்டதை எவ்விதமான தற்சாய்வுமின்றி உரையாக்கமாக எழுதுவது.

பொதுவாக ஒரு சமூகத்தின் இனவரைவியல் இ.பி.டைலர் பண்பாடு குறித்து 1871 ஆம் ஆண்டு எழுதிய புகழ்பெற்ற வரையறையின் அடிப்படையில் கட்டமைக்கப்படுகிறது. இங்கே அவசியம் கருதி இன்றளவிலும் தவிர்க்கப்படாமல் பல்கலைக்கழகங்களின் மானிடவியல் வகுப்புகளில் பயிற்றுவிக்கப்படும் அந்த வரையறையை காணலாம். பண்பாடு என்பது “பல்வேறு ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய பண்பாட்டுக்கூறுகளின் முழுமை – அக்கூறுகள் முறையே அறிவு, நம்பிக்கை/வழிபாட்டு முறை, கலை, விழுமியங்கள், நெறிமுறைகள், மரபார்ந்த செயல்பாடுகள், இவைகள் தவிர மனிதன் ஒரு சமூகத்தின் உறுப்பினராகச் செயல்பட முயன்று பெறும் திறன்கள், பழக்க வழக்கங்கள் போன்றவற்றையும் உள்ளடக்கியது”. இவ்வரையறையின் அடிப்படையில் ஒரு சமூகம் குறித்து முழுதளாவிய அணுகுமுறையில் இனவரைவியல் எழுதப்படுகிறது.

### இனவரைவியல் களஆய்வு

மானிடவியலின் மரபான களஆய்வு என்பது இவ்வறிவுப்புலத்தின் தனித்துவமான ஆய்வுமுறை. ஆய்வு செய்யும் சமூகத்தின் மக்களிடையே குறைந்தது இரண்டு ஆண்டுகளாவது

தங்கி அச்சமூகத்தின் உள்ளிருந்து அச் சமூகப்பண்பாடு குறித்து அறிந்து கொள்வது, இயல்பான சூழலில் ஆழமான ஈடுபாட்டுடன் அச்சமூகக்தின் பலதரப்பட்ட மக்களின் தினசரி வாழ்க்கைச்செயல்பாடுகள், பல்வேறு சமூகநிகழ்வுகள் குறித்து தீவிர களஆய்வின் மூலம் தரவுகள் சேகரிப்பது, குறிப்பெடுப்பது, மீண்டும் சரிபார்ப்பது, ஒழுங்கமைப்பது, அவற்றைப் பிரதிகளாக்குவது என பல செயல்பாடுகளை உள்ளடக்கியது. மானிடவியல் ஆய்வின் தனித்துவதைப்பற்றி மூத்த மானிடவியலாளர் டிம் இங்கோல்ட் (2008) குறிப்பிடுகையில் இது 'அவர்களை' பற்றிய ஆய்வு அல்ல மாறாக அவர்களுடன் 'சேர்ந்து' செய்யும் ஆய்வு என்று குறிப்பிடுகிறார். மரபான ஆய்வுக்களம் என்பது ஆய்விற்கு தேர்தெடுத்துக்கொண்ட சமூகம் வசிக்கும் ஒரு குடியிருப்பாக இருக்கலாம் அல்லது பல குடியிருப்புகளை உள்ளடக்கிய ஒரு நிலப்பரப்பாக இருக்கலாம்.

களத்தில் தரவுகள் சேகரிக்க 'பங்கேற்பு உற்றுநோக்கல்' (Participant observation), அச்சமூகத்தின் அனைத்துப் பிரிவு மக்களிடமும் இயல்பாக உரையாடிக்கேட்டறிதல், இதில் கிடைக்கும் தகவல்களிலிருந்து பெரும் ஊகங்களுக்கு மேலும் தொடர்ச்சியாகக் கேள்விகள் கேட்டு மேலும் தரவுகள் சேகரித்தல் அதிலிருந்து ஆழமான புரிதல்களைப்பெறுதல் எனத் தொடரும். இதில் அச்சமூகத்தின் மனித நடத்தைகள் அதற்கு அப்பண்பாட்டுச் சூழலில் அளிக்கப்படும் பொருள்கள் அதற்கான எடுத்துக்காட்டுகள், உண்மை நிகழ்வுகள் என ஆதாரத்தோடு சுட்டிக்காட்டப்படும். ஒரு இனவரைவியலாளர் கேள்விகள் கேட்பதற்கு இணையாக உள்ளூர் மக்களின், செயல்களை, உரையாடல்களை, அவர்கள் அளிக்கும் பதில்களை முழுகவனத்துடன் பொறுமையாக கவனிக்கப் பழகியிருக்க வேண்டும். இது தவிர களத்தில் கிடைக்கும் ஆவணங்கள், புழங்கு பொருட்கள், கலைப்பொருட்கள் இவைகளும் தரவுகள் சேகரிக்க ஆதாரங்களாகப் பயன்படுத்தப்படும். இவ்வாறு சேகரித்து, ஒழுங்கமைத்த தரவுகளிலிருந்து அச்சமூகத்தின் இனவரைவியல் கட்டமைக்கப்படும்.

இனவரைவியல் ஆய்வுமுறைகள் புரிந்துகொள்வதற்கு, கையாள்வதற்கு எளிதான முறைகளாகவே தோன்றும் ஆனால் களத்தில் அவைகளைப் பயன்படுத்தும் தீவிரத்தை பொறுத்தே கிடைக்கப்பெரும் தரவுகளின் தரமும், அளவும் இருக்கும். ஏன்,

எதற்கு, எவ்வாறு, எந்தச் சூழல் என்பதற்கான முழுமையான தகவல்கள் அச் சமூக பண்பாட்டின் உள்ளார்ந்த பொருண்மைகளை புரிந்து கொண்டு மேலோட்டமான விளக்கவுரையாக இல்லாமல் முழுமையான, திண்மையான இனவரைவியல் எழுத உதவும். போதிய தரவுகள் இல்லாமல் எழுதுவது இனவரைவியல் ஆகாது, மாறாக அச்சமூகம் குறித்த குறிப்புகளின் ஒரு சிறு தொகுப்பாகவே இருக்கும்.

களஆய்வில் புறவயப்பார்வை (etic) முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்று. மரபான மானிடவியல் ஆய்வு ஒரு ஆய்வாளனுக்கு வலியுறுத்துவது தன் சமூகம் தவிர்த்து பிறிதொரு சமூகத்தினை ஆய்வு செய்ய வேண்டும் என்பதே. இதற்கான முக்கிய காரணம், ஆய்வாளனின் தற்சாய்வு, உள்ளுணர்வு (subjectivity) ஆகியன அவர் சார்ந்த சமூகத்தில் ஆய்வில் ஈடுபடுகையில் புறவய யதார்த்தத்தினை புரிந்து கொள்வதில் ஏற்படும் மனக்குறுக்கீடுகள் ஆய்வில் உண்மை அறிதலை பாதிக்கக்கூடும். இதனால் இனவரைவியல் ஒரு புறவயமான யதார்த்தத்தினை கட்டமைப்பது பாதிப்படையக்கூடும் என எச்சரிக்கிறது. தவிர மானிடவியல் ஆய்வில் அகவயப்பார்வை (emic) என்பது ஒரு ஆய்வாளர் தான் சார்ந்த சமூகத்தின் உள்ளிருந்து ஆய்வு செய்வது அல்ல, மாறாக ஒரு ஆய்வாளன் தான் சாராத பிறிதொரு சமூகத்தினை ஆய்வு செய்யும் பொழுது எவ்வாறு அச் சமூக மக்களின் பார்வையில்/ காண்ணோட்டத்தில் சமூக நிகழ்வுகளை, நடத்தைகளை புரிந்து கொள்வதற்கான ஒரு ஆய்வு முறை. எனவே மானிடவியல் ஆய்வு களத்தில் ஆய்வாளரின் இடம், அடையாளம் என்பது அச் சமூகத்தில் உள்ளிருப்பவர் - வெளியிருப்பவர் (insider - outsider) என்கிற சமநிலையில் நின்று கொண்டு ஆய்விற்கான தரவுகள் சேகரிக்கும் பணியில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளவேண்டும்.

ஒரு ஆய்வாளன் முற்றிலுமாய் தவிர்க்கவேண்டியது அல்லது மிகுந்த கவனத்துடன் இருக்கவேண்டியது தன் சமூகக் கண்ணோட்டத்தின் (உயர்ந்தது /சரி எனக் கருதும்) அடிப்படையில் பிற பண்பாட்டு நடைமுறைகள், நம்பிக்கைகள் மற்றும் நடத்தைகளை மதிப்பிடும் மனப்பான்மை (ethnocentric).

**உரையாக்கம்**

உரையாக்கம் (textualization) இனவரைவியல் எழுதுவதற்கான முக்கிய தொடர் செயல்பாடாகும். ஆய்வுக்களத்தில் அனுபவபூர்வமாகக் காண்பதை, கேட்பதை, கவனிப்பதை, நிலவும், நிகழும் சூழலைக் குறிப்பெடுப்பது, பதிவிடுவது பிறகு அத்தரவுகளை சீர்செய்து, ஒழுங்கமைப்பது. அடுத்த கட்டமாக சமூகத்தின் அமைப்புகள், சூழல், நிகழ்வுகள், நடைத்தைகள் குறித்து உரைநடை வடிவில் தேவையான அளவிலான விவரங்களைக் கொண்ட விரிவுரையாக எழுதுவது எனலாம். இதற்கு ஆதாரமாக களத்தில், ஆய்வாளர் அனுபவத்தில் சேகரித்த தரவுகள் இருக்க வேண்டும். சில சூழல்களில் இந்த விவரிப்புகள் சமூகம் குறித்த நுண் பகுப்பாய்வையும் கொண்டிருக்கும். இந்த விவரிப்புகள் களத்தில் என்ன நிகழ்ந்தது எதற்கு, எவ்வாறு நிகழ்ந்தது என்பதை வசிப்பவர் அறிந்து கொள்ள உதவும். பொதுவாக இவ்விவரிப்பில், பகுப்பாய்வு மற்றும் விளக்கம் இரண்டுக்குமான முக்கியத்துவம் இருக்கும். வாசகர் இனவரைவியலை ஆர்வமாகப் படிக்கப் போதிய அளவு விவரிப்புகள் ஆதாரங்களுடன் இருக்கவேண்டும், அவ்விவரிப்புகள் பகுப்பாய்வினையும், அளித்திருக்கும் விளக்கத்தினையும் புரிந்து கொள்ள உதவ வேண்டும்.

களத்தில் தரவுகளை சேகரிக்கும் பொழுது, அல்லது தகவல்களாகத் தொகுக்கும் பொழுது, இறுதியில் ஆரம்பகட்ட முடிவுகளை எழுதும்போது ஆய்வில் பங்கேற்றவர்களிடம் பேசி சரிபார்த்து அவைகளின் மெய்தன்மைக் குறித்து உறுதிப்படுத்திக்கொள்வது அவசியம். இந்த செயல்பாடு தேவையிருப்பின் மேற்கொண்டு தரவுகளோ, தகவல்களோ சேர்ப்பதற்கான வாய்பினை அளிக்கும்.

உரையாக்கத்தின் அடுத்த நிலையில் பொருத்தமான கருத்துருவாக்கங்கள், கோட்பாடுகளோடு தொடர்புபடுத்தி பண்பாட்டு அர்த்தங்களை உரைநடை வடிவில் விளக்கவுரையாக இனவரைவியல் எழுதுவது. மேலும் தேவைக்கேற்ப மானிடவியல் அல்லது பிற அறிவுப்புலங்களின் கோட்பாட்டுக் கருத்துக்களையும் இணைத்து எழுதுவதின் மூலம் விளக்கவுரைகளின் ஆழமும்,

நுட்பமும் கூடும். எனவே ஒரு தரமான விளக்கவுரை எழுத மானிடவியல், மற்றும் பிற சமூக அறிவுப்புலங்களில் உள்ள கருத்தாக்கங்கள், கோட்பாடுகள் குறித்த அறிவும், செய்திறனும் இனவரைவியலாளருக்கு அவசியம்.

இனவரைவியல் எழுத்து என்பது விரிவான விவரிப்பாகவும், வாசகனின் ஆர்வத்தைத் தூண்டும் விதத்திலும், உயிர்ப்புடனும் இருக்கவேண்டும். இது ஒரு ஆய்வு சார்ந்த எழுத்து எனினும் களச்சூழலை, மக்களின் அனுபவங்களை, உணர்வுகளுக்கு இயன்றவரை உயிரோட்டமுள்ள ஒரு படைப்பாக்க நடையில் எழுத வேண்டும். படிக்கும் வாசகர் களத்தில் தான் காண்பது போன்ற ஒரு உணர்வை கொடுக்க வேண்டும். இனவரைவியல் எழுத களத்தில் தகவல்கள் சேகரிப்பதும் அதை அச்சமூகப் பண்பாடு குறித்த ஒரு முழு விளக்கவுரையாகக் கட்டமைப்பதும் ஒரு நெகிழ்வான படைப்பாக்கச் செயல்முறையாகும்.

களஆய்வு மற்றும் உரையாக்கத்தின் தீவிரம் பற்றிப் குறிப்பிடுகையில் இருபதாம் நூற்றாண்டின் தலை சிறந்த/பிரபலமான அமெரிக்க மானிடவியலாளர் கிளிபோர்ட் கீர்ட்ஸ்ன் (Geertz, 1973) கருத்து இங்கே பொருத்தமாக இருக்கும். “இனவரைவியலை அவர் பின் கண்டவாறு விவரித்து எழுதுகிறார். இனவரைவியல் என்கிற செயல்முறை, நட்புணர்வு அல்லது ஒத்துணர்வினை (ஆய்வாளர் - ஆய்விற்குட்படுத்தப்படுவோர் இவர்களுக்கிடையில்) உருவாக்குவது, தகவலளிப்போரை ஆய்வு களத்தில் தேர்வு செய்வது, உரைகளை பிரதியெடுப்பது, கால்வழித்தடங்களுக்கான (Genealogies) தகவல்கள் சேகரிப்பது, ஆய்வுகளத்தில் பிற வரைபடங்களைத் தயாரிப்பது, நாட்குறிப்புகள் எழுதுவது” என்பன போன்றது. ஆனால் இனவரைவியல் என்கிற இடர்கள் நிறைந்த முயற்சியானது ஆய்வுமுறை நுட்பங்கள், செயல்முறைகள் போன்ற செயற்பாடுகளன்று. அதை வரையறை செய்வது எனில் அது ஒரு வகையான அறிவார்ந்த முயற்சி, நுட்பமான தீவிரச்செயற்பாடு, கில்பர்ட் ரையல் (Gilber Ryle) யிடமிருந்து பெறுவதுயெனில் இதை அவர் ‘திண்மையான விவரிப்பு’ (thick description) என்கிறார்.

## ஆரம்ப அல்லது ஐரோப்பிய காலனியாட்சிக்கால இனவரைவியல் ஆய்வுகள்

இனவரைவியல் என்கிற சொல் 19ம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் மானிடவியல் ஆய்வுகளில், ஐரோப்பா தவிர்த்த புவியின் பிற நிலப்பரப்புகளில் வசிக்கும் சமூகங்களின் சமூகப் பண்பாடு குறித்த நேரடிக் களஆய்வின் மூலம் விளக்கவுரையாக எழுதுவது என்கிற பொருளில் பயன்படுத்தப்பட்டது. அப்போது பிரபலமாக பேசப்பட்ட பண்பாட்டுப் படிமலர்ச்சிக் கோட்பாடான சமூக டார்வினிசம் (Social Darwinism) 19 ஆம் நூற்றாண்டின் இறுதி மற்றும் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்க காலங்களில் ஒரு சமூகத்தின் மேல்நிலை என்பது உயர் தொழில்நுட்பம், உயர்ந்த நிர்வாகமுறை, உண்மையான சமயவழிபாட்டு முறை என்கிற அளவுகோல்களைக் கொண்டு முடிவு செய்தது. இதன்படி ஐரோப்பிய சமூகம் மிக உயர்ந்த நிலையை அடைந்துள்ள சமூகம் என்றும் படிநிலையின் உச்சியில் அதற்கான இடமும் அளிக்கப்பட்டது. சமூக டார்வினிசம் பிரபலமாகப் பேசப்பட்ட அதே காலகட்டத்தில்தான் ஐரோப்பிய நாடுகளின் காலனிய விரிவாக்கம் மிக வேகமாக நடைபெற்றது. காலனி ஆட்சியாளர்களின் புரிதலுக்கு ஏற்ப காலனிகளில் உள்ள சமூகங்கள் ஐரோப்பிய சமூகங்களுக்குக் கீழே வெவ்வேறு படிநிலைகளில் பொருத்தப்பட்டன. இந்தப் படிநிலையில் தொல்குடிகள் அல்லது பழங்குடிச் சமூகங்கள் மிகவும் ஆரம்ப நிலையில் (primitive) அடித்தளத்தில் உள்ள சமூகங்களாகக் கருதப்பட்டன. அத்தகைய புரிதல், பார்வையுடன்தான் காலனிய காலத்து இனவரைவியல்களும் எழுதப்பட்டன. காலனி நாடுகளில் ஆரம்பகால இனவரைவியல் தொடர்பான குறிப்புக்கள், எழுத்துக்கள், நூல்கள் ஆகியவை ஐரோப்பிய வர்த்தகர்கள், காலனி ஆட்சியின் நிர்வாக அதிகாரிகள், சமயப் பணியாளர்கள், சில வேளைகளில் பயிற்சி பெற்ற மானிடவியலாளர்கள் ஆகியோரால் எழுதப்பட்டன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் முழுவதுமாய் வடிவமெடுத்த மானிடவியல் என்கிற அறிவுப்புலம் அக்காலச் சூழலில் ஒரு அவசரகதி வேலையாக மறைந்துகொண்டிருக்கும் ஐரோப்பா தவிர்த்த புவியின் பிற நிலப்பரப்புகளில் வாழ்ந்து

கொண்டிருக்கும், மறைந்து கொண்டிருக்கும் 'பிற சமூகங்களின்' (other cultures) வாழ்க்கை முறை, பண்பாட்டு நடைமுறைகளை ஆவணப்படுத்துவது அவசியம் எனக் கருதியது. இந்தப் 'பிற சமூகங்கள்' என்கிற கருத்து, சொல்லாடல் ஏற்கனேவே குறிப்பிட்டது போல இச்சமூகங்கள் படிநிலையில் ஆரம்ப நிலையில் உள்ள பண்பாடற்ற சமூகங்கள் என்கிற பார்வை நிலவிய அச்சூழலில் அப்பார்வைக்கு வலு சேர்க்கும் வகையில் புகழ் பெற்ற மானிடவியல் ஆய்வாளரும், செயற்பாட்டியம் (functionalism) கோட்பாட்டினை உருவாக்கியவருமான மாலினோவ்ஸ்கி (Malinowski) தன்னுடைய ட்ரோபிராண்ட் (Trobrand) தீவு மக்கள் குறித்த புகழ் பெற்ற நூலின் முன்னுரையில் பின்கண்டவாறு எழுதினார், "தற்காலத்தில் கூட அறிவியல்பூர்வமான ஆய்வுக்கு இன்னும் மிக அதிக எண்ணிக்கையில் தொல்குடிச்சமூகங்கள் இருப்பினும் அவைகள் ஒன்று அல்லது இரண்டு தலைமுறைகளில் மறைந்துபோகும்". எனவே அச்சமூகங்கள் குறித்து ஆய்வுகள் செய்து எழுதுவது, ஆவணப்படுத்துவது, படமெடுப்பது போன்ற செயல்பாடுகள் எவ்வாறு மனித சமூகம் என்பது பண்பாடற்ற நிலையிலிருந்த மாறிவந்திருக்கிறது என்பதை அறிவதற்கான ஆதாரங்களை அளிக்கும் எனக் கருதப்பட்டது. அதே போல மானிடவியல் அறிவுப்புலத்தில் நன்கு அறியப்பட்ட, அமைப்பிய செயற்பாட்டியியல் (structural functionalism) கோட்பாட்டினை வகுத்த ரேட் கிலிஃப் பிரவுன் 1945 ஆம் ஆண்டு ஆஸ்திரேலிய தொல்குடிகள் அடிநிலையில் இருக்கும் சமூகங்களுக்கு ஒரு முன்மாதிரிச் சமூகம் என்று எழுதினார்.

மேற்குறிப்பிட்ட இருவரில் மாலினோவ்ஸ்கி மானிடவியலில் களஆய்வுமுறையை வடிவமைத்ததிலும், ரேட் க்ளிப் பிரவுன் கோட்பாடு உருவாக்கத்திலும் மானிடவியல் என்கிற அறிவுப்புலத்தின் வளர்ச்சிக்கு சீரிய பங்களிப்பு செய்தவர்கள். இங்கே அவர்களை மேற்கோள் காட்டியதே அன்றைய காலகட்டத்தில் எவ்வாறு சமூகங்கள் குறித்த மானிடவியலாளர்களின் பார்வை இருந்தது என்பதை பதிவு செய்யவேயன்றி அவர்களது பங்களிப்புக் குறித்த எதிர்மறையான கருத்தினை உருவாக்குவதற்கு அல்ல.

ஐரோப்பிய சமூகங்கள் பண்பட்ட சமூகங்கள், அறிவியல், தொழில்நுட்பம், என வளர்ச்சிபெற்ற சமூகங்கள் எனவும்

அதற்கு நேர் எதிர்திசையின் இறுதியில் தொல்குடிச்சமூகங்கள் வளர்ச்சியின் ஆரம்ப கட்டத்தில் உள்ள சமூகங்கள் என்கிற கருத்து மானிடவியலாளர்களாலும் முன்வைக்கப்பட்டது. அது மட்டுமன்றி இச் சமூகங்கள் மாற்றங்களுக்குட்படாத அல்லது மிக மெதுவாக மாற்றங்கள் நிகழும் மரபானச் சமூகங்கள் என்கிற சொல்லாடலும் உருவாக்கப்பட்டது.

இந்தியச் சூழலில் ஏறக்குறைய 150 ஆண்டுகள், 1947 ஐரோப்பிய காலனி ஆட்சி முடிவுக்கு வரும் வரை எழுதிய இனவரைவியல் கட்டுரைகளும், நூல்களும் பழங்குடிகளை மந்தமானவர்கள், காட்டுமிராண்டிகள், பண்பாடற்றவர்கள், காலத்தால் பின்தங்கியவர்கள், கீழானவர்கள் என்கிற பொருளிலேயே எழுதினார்கள் . ஐரோப்பியர்கள் மட்டுமல்ல 1947 க்குபின்வந்த முதல் தலைமுறை இந்திய மானிடவியலாளர்களின் பார்வையும் இதை ஒத்தே இருந்தது, உயர் சாதியைச் சேர்ந்த குரியே (1963) மற்றும் போஸ் (1943) போன்ற இந்திய மனிடவியலாளர்கள் பழங்குடிகள் பின்தங்கிய நிலையில் உள்ளனர் அவர்கள் முன்னேற்றம் பெற பொது சாதீய இந்துச்சமூகத்தில் கலந்து கரைந்து போக (assimilation ) வேண்டும் என்கிற கருத்தினையே முன்வைத்தனர் (திரிபுரா, 2023).

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இனவரைவியல் என்கிற ஆய்வுமுறை எழுத்துவகை மானிடவியலில் அறிமுகப்படுத்தப்பட்டபின் அதுவே மானிடவியலின் முக்கிய ஆய்வு முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. மானிடவியலில் மிகச் சிறந்த இனவரைவியல் நூல்களை இருபதாம் நூற்றாண்டின் முதல் பாதியில் எழுதிய முன்மாதிரி மானிடவியலாளர்கள் பட்டியல் சற்று நீண்டது, அதில் மிக முக்கியமானவர்கள் ரேட் கிலிஃ - பிரவுன் (Red Cliff - Brown), மாலினோவ்ஸ்கி (Malinowski), பிரான்ஸ் போவாஸ் (Franz Boas), மார்க்ரெட் மீட் (Margret Mead), ஈவான்ஸ் - பிரிச்சர்ட் (Evans - Pritchard), ரேமன்ட் பிர்த் (Raymond Firth) மற்றும் லெவிஸ் - ஸ்ட்ராஸ் (Levi - Strauss) போன்றோர். இருபதாம் நூற்றாண்டு முழுமையும் புகழ்பெற்ற ஐரோப்பிய, அமெரிக்க மானிடவியலாளர்கள் ஆசிய, ஆப்பிரிக்க, தென்னமெரிக்க, தெற்குபசிபிக் தீவுகளில் உள்ள பழங்குடி மற்றும் பிற சமூகங்கள் குறித்து அறிவியல் ரீதியான ஆய்வுமுறைகளைப் பயன்படுத்தி மிகவிரிவான இனவரைவியல்

ஆய்வுகளை நூல்களாக வெளியிட்டுள்ளனர். தொடர்ந்து வந்த காலங்களில் மற்ற சமூக அறிவியல் கல்விப்புலங்களும் குறிப்பாக சமூகவியல் அறிவுப்புலத்தில் இனவரைவியல் ஆய்வு முறையைப் பயன்படுத்தத் தொடங்கினர்.

இந்திய அளவில் விடுதலைக்குப்பின் 1950களில் அமெரிக்க மானிடவியலாளர்கள் இந்தியமானிடவியலாளர்கள் துணையுடன் இந்திய கிராம வாழ்க்கைக் குறித்த இனவரைவியல் ஆய்வில் ஆர்வம் காட்டினார். இந்திய கிராமங்களின் சமூக வாழ்க்கை, சாதிய சமூகங்களின் பங்கு இவற்றை ஆய்வதின் மூலன் இந்திய நாகரீகத்தை புரிந்துகொள்ள முடியும் என நம்பினர். கிராமங்களின் சமூக வாழ்க்கையை மையப்படுத்தி செய்த இனவரைவியல் ஆய்வுகளை இரு முக்கிய தொகுப்புகளாக Village India and India's village 1955 ம் ஆண்டு வெளியிடப்பட்டது. தொடர்ந்து வந்த காலங்களில் மானிடவியலாளர்களின் ஆய்வு பன்முகத்தன்மை கொண்டதாக இருந்தது, அவற்றில் முக்கியமாக கவனம் பெற்ற ஆய்வுகளில் இந்தியவியல், அடித்தள அல்லது விளிம்பு நிலை சமூகங்கள் ஆய்வு, காலனிய நீக்கப் பார்வையில் இனக்குழு வரலாறு/இனவரைவியல் போன்றவை இடம்பெற்றன.

**தமிழ்ச் சூழலில் இனவரைவியல் ஆய்வுகள்**

இன்று தமிழ் மாநில நிலப்பரப்பாக இருக்கும் பகுதியில் உள்ள சமூகங்களின் வரலாறு இனவரைவியல் ஆய்வுகள், குறிப்புக்கள், கட்டுரைகள், நூல்கள் என 16 ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து 1947 ஆம் ஆண்டு இந்தியா விடுதலை அடையும் வரை ஐரோப்பிய காலனி அரசுகளின் அதிகாரிகள், காலனி அரசு அமர்த்திய ஐரோப்பிய மானிடவியலாளர்களால் காலனி அரசுகளின் தேவையை முதன்மையாக கருத்தில் கொண்டே எழுதப்பட்டது. ஐரோப்பிய அறிவுத்திறனுடன் காலனி ஆட்சிக்குத் தேவைப்படும் தரவுகளை சேகரிக்கும் அணுகுமுறையுடன் ஆய்வுக்கட்டுரைகளும், அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டன. அவர்களின் நோக்கம் தெளிவாக இருந்தது. காலனி ஆட்சியின் அதிகாரத்திற்குக் கீழே கொண்டு வர இங்குள்ள சமூகங்களின் பண்பாடு மற்றும் வாழ்க்கைமுறைப் பற்றிய புரிதல்கள் அவசியம். காலனி ஆட்சி கால இனவரைவியல்

எழுத்துகள் குறித்து எழுதுகையில் பர்கர் (Berger,2012) இவ்வாறு எழுதுகிறார், பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியில் இருந்து சாதி அமைப்புகள் குறித்த பட்டியல், தகவல்கள், அதில் மக்கள் எண்ணிக்கை கணக்கிடல் ஆகியவற்றில் கவனம் செலுத்தினர். சாதிச் சமூகங்களை புரிந்து கொண்டால் மக்களைப் புரிந்து கொள்ளலாம் எனவே இந்தியாவையும் என்பதால் அவ்வாறு கவனம் செலுத்தினர்.

ஐரோப்பிய காலனி அரசுகள் தங்களது ஆட்சியின் கீழ் வரும் நிலப்பரப்பினை மலை, காடு, பள்ளத்தாக்கு, தீவுகள் போன்ற பகுதிகளுக்கு விரிவாக்கம் செய்தபோதுஅங்கு வசித்து வந்த மக்களை 'பழங்குடிகள்' என வகைமைப்படுத்தினர். இனவரைவியல் குறிப்புகளும், நூல்களும் பொதுநீரோட்டக் சமூகங்கள் தாண்டி காடுகளின் உட்புறங்களிலும், பள்ளத்தாக்குகள், மலைப்பகுதிகளிலும் வாழ்ந்து வந்த பழங்குடிகள் பற்றியும் எழுதப்பட்டது. மேலும் இயற்கை வளங்கள் நிறைந்த பழங்குடிகளது வாழிடங்களை, பரந்த நிலப்பரப்பினை தங்கள் கட்டுப்பாட்டில் காலனி ஆட்சிக்குக் கீழ் கொண்டு வரவும், அங்குள்ள வளங்களை எடுத்துச் செல்லவும் இவ்வாய்வுகள் பயன்படுத்தப்பட்டன.

அயல் நாட்டு மானிடவியலாளர்களால் தமிழ் நாட்டுப் சமூகங்களிடையே கள ஆய்வுக்குப்பிறகு (பழங்குடிச் சமூகங்கள் உட்பட) ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இனவரைவியல் நூல்கள் (monograph) மற்றும் கட்டுரைகள் இக் கட்டுரையின் இறுதியில் இணைப்பு 1 ல் தரப்பட்டுள்ளது. இந்தப் பட்டியல் காலனி காலத்தில் தொடங்கி, மிக அண்மையில் களஆய்வின் அடிப்படையில் மானிடவியலாளர்கள் எழுதிய நூல்கள், கட்டுரைத் தொகுப்புகள் வரை அடங்கும். இதில் தர்ஸ்டனின் 'தென்னிந்திய சாதிகளும் பழங்குடிச் சமூகங்களும்' நூலின் தொகுப்புகள் தவிர சி. ஜெ. புல்லர் எழுதிய 'இறைவியின் (தேவியின்) பணியாட்கள்: தென் இந்தியக் கோவில் ஒன்றின் அர்ச்சகர்கள்' (Servants of the Goddess: The Priests of a South Indian Temple) மற்றொன்று ராபர்ட் எல்.ஹார்ட்கிரேவ் எழுதிய 'தமிழக நாடார்கள்' (The Nadars of Tamil Nadu) இரண்டு நூல்களும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. மற்ற எந்த நூலும் தமிழில் மொழிபெயர்க்கப்படவில்லை. தமிழ் சூழலில் முடங்கிப்போயிருக்கும் இந்த தரமான ஆய்வு எழுத்துக்கள்

தமிழில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டிருந்தால் தமிழ் வாசகர்கள் பயனடைந்திருப்பார்கள். பல்கலைக்கழகங்களின் பதிப்புத்துறைகள் இதை செய்திருக்கலாம். கடந்த காலத்தில் ஓரளவு பதிப்புத்துறைகள் இயங்கிக்கொண்டிருந்த பொழுதே இது நடைபெறவில்லை இன்றைய சூழலில் கற்பனைக்கூட செய்ய முடியாது. எனவே தரமான மொழிபெயர்ப்புகளை வெளியிடும் தனியார் பதிப்பகங்கள் இந்த முயற்சியில் ஈடுபடலாம். குறைந்தபட்சம் சில தேர்ந்தெடுத்த இனவரைவியல் நூல்களையாவது மொழிபெயர்த்து வெளியிட்டால் ஆய்வாளர்களுக்கும், பழங்குடிச் சமூக ஆர்வளர்களுக்கும் தமிழில் வாசிக்கக்கிடைக்கும். இவைகள் சந்தையில் விலை போகக்கூடிய சரக்குகள்தான்.

தவிர 1947 ல் ஆங்கிலேய காலனி ஆட்சி முடிவுக்கு வந்த பிறகு இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்புத் துறை 1961 ஆம் ஆண்டு தேர்ந்தெடுத்த பழங்குடிச் சமூகங்கள் பற்றிய இனவரைவியல் கட்டுரைகள் அடங்கிய இரண்டு தொகுப்புகளை ஆங்கிலத்தில் வெளியிட்டிருக்கிறது.

இதுவரையிலும் தனிப்பட்ட சமூகங்கள் குறித்த இனவரைவியல் நூல்கள் தமிழில் (சிலது குறு நூல் என்று கூடச் சொல்லலாம்) மிகச் சொற்ப எண்ணிக்கையிலேயே வெளிவந்திருக்கின்றன (இணைப்பு 2), இணைத்திருக்கும் பட்டியலில் விடுபட்ட நூல்கள் இருக்கலாம். இங்கே ஒரு கருத்தினை சுட்டிக்காட்டவேண்டியுள்ளது, ஒரு சமூகம் குறித்து விரிவான, முழுமையான இனவரைவியல் நூல் எழுத களஆய்வு, போதிய தரவுகள் சேகரித்தல் பிறகு உரையாக்கம் என இவை அனைத்தும் தீவிர செயல்முறையாக நடைபெறவேண்டும். அதற்கு முன்தேவையாக மானிடவியல் ஆய்வுமுறைகள் பற்றிய முறையான, போதிய பயிற்சியும், அறிதலும் அவசியம்.

பல்கலைகலைக்கழகங்களில், ஆய்வு நிறுவனங்களில் உள்ள மானிடவியல் துறை, மொழியியல், நாட்டார்வழக்காற்றியல், சமூகவியல், வரலாறு போன்ற துறைகளிலும் பல்வேறு சமூகங்கள் குறித்த தரமான முனைவர் பட்ட ஆய்வேடுகள் தயாரிக்கப்பட்டிருப்பதை அறிவோம். ஆனால் அந்த ஆய்வேடுகள் இதுவரையிலும் இனவரைவியல் நூல்களாக (monograph)

வெளியிடப்படவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வேடுகள் நூல்களாக வெளியிடப்படுமாயின் அச் சமூகங்கள் குறித்து அறிந்து கொள்வதற்கான வாய்ப்புகள் ஆய்வாளர்களுக்கும், வாசகர்களுக்கும், கொள்கை முடிவுகள் எடுக்க தேவைகள் கருதி தகவல்கள் தேடும் அரசுத் துறை அதிகாரிகளுக்கும் பயன்படும்.

1945 ஆரம்பிக்கப்பட்ட இந்திய மானிடவியல் கணக்கெடுப்பு ஆய்வுமையம் (Anthropological Survey of India) அதன் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக இந்தியாவில் உள்ள சாதி, பழங்குடி, அலைகுடிச் சமூகங்களின் வாழ்க்கைமுறைகளை இனவரைவியல் நூல்களாக எழுதுவதைக் கொண்டிருப்பினும், இன்றுவரை தமிழ் நாட்டில் உள்ள ஒரு சாதிச் சமூக அல்லது பழங்குடிச் சமூகத்தின் இனவரைவியல் கூட ஆங்கிலத்திலோ அல்லது தமிழிலோ இந்நிறுவனத்தினால் வெளியிடவில்லை.

## பின்நவீனத்துவமும் இனவரைவியலும்

பின் நவீனத்துவம் (Post modernism) 20 ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் கலை, தத்துவம், இலக்கியம், வரலாறு என பல அறிவுப்புலங்களில் உருவான மாற்றம்/போக்கு/இயக்கம், இது மானிடவியலிலும் அதன் தாக்கத்தை உண்டாக்கியது. பின் நவீனத்துவம், நவீனத்துவத்தின் (modernism) பின்புலத்தில் அறிந்து கொள்ள வேண்டியது என்பது தவிர்க்கமுடியாதது. நவீனத்துவம் 19 ஆம் நூற்றாண்டின் இறுதி, 20 ஆம் நூற்றாண்டின் முற்பாதி வரையிலும் தீவிரமாக இயங்கிய ஒன்று. நவீனத்துவதில் புதிய தத்துவம், பொருளாதாரம், முன்னேற்றம், தர்க்கம், பகுத்தறிவு, புதிய அரசியல் அமைப்புகள், புதிய வாழ்க்கைமுறை என இவை யாவும் ஏற்கனேவே இருந்த பழைய அமைப்புகளையும், வடிவங்களையும், கருத்துகளையும், நம்பிக்கைகளையும் மாற்றியது. அதிகாரம், உண்மை போன்ற கருத்தாக்கங்கள் குறித்து புதிய வரையறைகள் உருவாக்கப்பட்டன. ஏற்கனவே கூறியது போல 20ம் நூற்றாண்டின் பின் பாதியில் வந்த பின் நவீனத்துவ திறனாய்வுகள் ஏற்கனவே ஏற்புடையதான அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட நவீனத்துவ பார்வைகள், அனுமானங்கள், கருத்தாக்கங்கள், கோட்பாடுகள் போன்றவற்றை தீவிரமாக விமர்சனத்திற்குட்படுத்தி

நிராகரித்தது தவிர சில வேளைகளில் அதற்கான மாற்றாகவும் முன்வைக்கப்பட்டது.

நவீனத்துவத்தின் மறுபரிசீலனையாக வந்த பின் நவீனத்துவம் மானிடவியலில் அதன் மூலக் கருத்துக்களான சமூகம், பண்பாடு, இனவரைவியல் குறித்த புரிதல்களுக்கு புதிய அணுகுமுறையை முன்வைக்கிறது. அதிகாரம், உண்மை, பன்மையம் சார்ந்த கருத்தாக்கங்களை முன்னிறுத்தி புதிய விளக்கங்களை அளிக்க முயற்சிக்கிறது. பெருஞ்சொல்லாடல்களை (meta narratives) நிராகரித்து ஒற்றைத்தன்மைக்கு மாற்றாய் பன்மையத்தை முன்வைக்கிறது. ஒரு சமூகப் பண்பாட்டின் இனவரைவியல் - ஒற்றைத் தன்மையுடன் பொதுமைப்படுத்தப்பட்ட விளக்கவுரை என்கிற கருத்தாக்கத்தினை கேள்விக்குட்படுத்துகிறது. ஒரு சமூகப்பண்பாட்டின் உண்மைநிலை (reality) என்பதே பன்மையமானது, முழுமையற்ற பல பகுதிகளாக/துண்டுகளாக (உள்ளூர்/வட்டாரத் தன்மைகளுடன்) இருப்பது. பிரதிநிதித்துவம் (representation) என்பது பற்றி பேசும் பொழுது ஆய்வாளர் மட்டுமே எழுதும் விளக்கவுரையாகவின்றி அது ஆய்வாளர் மற்றும் ஆய்வில் பங்கேற்போர்/சமூகத்தார் இரு சாராரின் குரல்களையும் கொண்ட ஒரு கூட்டு முயற்சியாக இருக்கவேண்டும். மேலும் சமூகப்பண்பாட்டின் யதார்த்தினைக் (உண்மை நிலை என்பதை) கட்டமைப்பதில் மொழியின் முக்கிய பங்கினை வலியுறுத்துகிறது. பின் நவீனத்துவம் ஒரு சமூகத்தின் பண்பாட்டின் ஒற்றைத் தன்மையை தீவிரமாக மறுதலிக்கிறது. இந்த அணுகுமுறையில் இனவரைவியல் என்பதை பல்வேறு வகைகளில் தங்களது எழுத்துக்களில் பின் நவீனத்துவ மானிடவியலாளர்கள் பரிசோதனை செய்தனர்.

பண்பாட்டுப் பன்மையம் (cultural diversity) என்பதையும் தாண்டி, ஒரு குறிப்பிட்ட சமூகப் பண்பாட்டிற்குள் இருக்கும் பன்மைத்துவத்தினையும் (உட்குழுக்கள்/உட்பிரிவுகள்) அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். அவற்றில் மையம் - விளிம்பு நிலைகள் இருக்கிறது, அதில் உள்ள விளிம்பு நிலைக்குழுக்கள், அவற்றின் குரல்களுக்கு அளிக்க வேண்டிய முக்கியத்துவம் குறித்து பேசுகிறது. ஒரே பண்பாட்டிற்குள் இருக்கும் பன்மைத்துவக் குரல்களை அடையாளம் கண்டு, அவைகளை உள்ளடக்கி அக்குரல்களுக்கு வாய்ப்புகளை உருவாக்க வேண்டும், அவற்றுள்

இருக்கும் முரண்பாடுகள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும் என்கிறது. ஒரு சமூகப் பண்பாடு குறித்து பலகுரல்கள் வெளிப்படும் இனவரைவியல் எழுதப்படவேண்டும் என்று வலியுறுத்துகிறது. இனவரைவியலின் உரையாக்கம் ஒற்றைத்தனமான உண்மையை முன்வைப்பதின் மூலம், அச் சமூகத்தின் உட்குழுக்களின் குரல்களை, பன்மையமாய் இருக்கும் உண்மைகளை மறைக்கிறது என்கிற கருத்தும் முன்வைக்கப்படுகிறது.

ஒரு மானிடவியலாளர் தன் அறிவுப்புலம் சார்ந்து தான் கற்றறிந்த அறிவின் மூலம் பெற்ற அதிகாரத்தின் (authority) தலையீட்டைக் ஆய்வில் இது கட்டுப்படுத்தும் உதவும் என நம்புகிறது. இனவரைவியல் எழுதும் ஒரு மானிடவியலாளருக்கு தொடர் சுயவிமர்சன விழிப்புணர்வு (self critical awareness) மிக அவசியம். அந்த விழிப்புணர்வு களஆய்வு தொடங்கிய நிலையிலிருந்து அச்சமூகத்தின் உண்மை நிலையினை விளக்கும் உரையாக்கம் என முடியும் வரை தொடரவேண்டும்.

காலனியம் என்கிற சொல் நேரடிப்பொருளில் காலனி அரசுகள் செலுத்திய காலனியாதிக்கம் என்றே புரிந்து கொள்ளப்படுகிறது. இனவரைவியல் ஆய்வில் ‘காலனியநீக்கம்‘ என்கிற கருத்தாக்கம் பின்நவீனத்துவத்தின் பண்புக்கூறுகளான மேலாதிக்கம், அதிகாரம், அதிகாரக்கட்டமைப்புகள், பெருஞ் சொல்லாடல் நிராகரிப்பு போன்றவற்றை உள்வாங்கிக்கொண்டு காலனிய ஆட்சிக்காலச்சூழலில் கட்டமைக்கப்பட்ட இனவரைவியல் எழுத்துக்களை, உருவாக்கப்பட்ட கருத்துக்களை கேள்விக்குட்படுத்துகிறது, இனவரைவியல் கட்டவிழ்ப்பு செய்கிறது. இதற்கான ஆய்வுமுறைகளையும், நுட்பங்களையும் பின்நவீனத்துவம் அளிக்கிறது. இந்திய இனவரைவியல் வரலாற்றில் ஐரோப்பிய காலனி ஆட்சி காலத்தினைத் தொடர்ந்து 1947 ஆம் ஆண்டின் பின் இனவரைவியல் எழுதியது இந்திய சமூகத்தின் உயர் சாதியைச் சேர்ந்த ஆண் மானிடவியலாளர்களே இதில் விதிவிலக்காக ஓரிருவரே பெண்கள், அதில் முக்கியமானவர் ஐராவதி கார்வே (Iravathy Karve) எனவே ஆணாதிக்க மனோபாவமும் இணைந்தே செயல்பட்டது. எனவே இனவரைவியல் எழுத்தில், வரலாற்றில் காலனிய நீக்கம் என்பது மேற்கத்திய காலனிய , உயர்சாதி (பார்ப்பனீய), ஆணாதிக்க

என்கிற மூன்று மேலாதிக்க, அதிகார செயல்முறைகளையும் இணைத்தே பேசப்படவேண்டியுள்ளது. தேர்ந்தெடுத்து காலனிய நீக்கம் என்று ஐரோப்பிய காலனிய இனவரைவியல் சிந்தனை, செயல்பாடுகளோடு சுருக்கிக்கொள்வது முழுமையான காலனிய நீக்கமாகாது. காலனிய நீக்கப் புரிதலுக்கான முதல்படி ஆய்வாளரின் கண்ணோட்டத்தில், சிந்தனையில் ஏற்படவேண்டிய மாற்றம். கீழ் கண்ட எடுத்துக்காட்டு எவ்வாறு காலனிய, பார்ப்பனிய, ஆணாதிக்கப் பார்வைகளின் கலவையாக இப்பிரதி உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை புரிந்து கொள்ள உதவும் என நம்புகிறேன்.

மெக்கன்சி சுவடிகளில் தமிழகப் பழங்குடிகள் நூலில் (மா. ராசேந்திரன், 2014) வில்லியர், இருளர் சரித்திரத்தை வேடர் சரித்திரம் சுவடியில் (டி 2681), தோற்றப்புராணம் குறித்து பின்கண்டவாறு கூறப்பட்டிருக்கிறது– "யுகாந்தா பிறளயத்துக்குப் பிற்காலம் வில்லியர் என்றும் யிருளரறென்றும் மலையரசென்றும் வேடரென்றும் சொல்லப்பட்ட சாதிகள் வனவாசி களா யிருக்கிறார்கள். இவாள் மகா சாபம் பெத்த ஒரு ரிஷியினுடைய பிள்ளைகளென்று சொல்லப்பட்டார்கள். இவாள் முன்னம் முழுதும் நிறுமானிகளாயிருந்தார்கள். இப்போ ஆண்பிள்ளைகள் மிருகத் தோலும் பெண் பிள்ளைகள் தைத்த யிளையும் உடுத்திக் கொண்டிருக்கிறார்கள்..........இதில் முகாந்திர மென்ன மென்றால் துஷ்ட மிருகங்க ளிவாளை பீறிப் போடுகிற நடத்தையா யிருக்கையில் மாலாரிஷி எனப்பட்ட ஒரு பெரியவர் வந்து இவாளுடன் சஞ் சாரம் பண்ணி இவாளுட பெண்களில் சிலர் எவ்வற்ணமா யிருக்கிறவர்களை புணர்ந்து சில பிள்ளைகளுண்டாகையால் இவாள் மிருகங்களினால் பீறிப் போடுகிறத்தைத் கண்டு மனதுருகி இவாள் துஷ்ட மிருகங்களுக்கு கார்க்கப் படும்படிக்கு கன்னிகா பொங்கலிட யோசினைச் சொன்னார்............" இப்படி த்தான் இந்த சுவடியில் உள்ள தகவல்கள் தொடர்கிறது.

பூக்கோ (1980) என்கிற பிரெஞ்சு பின் நவீனத்துவவாதி "அதிகாரமும், அறிவும் பிரிக்க முடியாதது, ஒன்றுடன் ஒன்றாக இருப்பது என்கிற கருத்தினை முன்வைக்கிறார். அறிவு என்பது அதிகாரத்தைச் சேர்ந்திராத புறவயமான ஒன்று அன்று. அறிவு உருவாக்கப்படுவதே அதிகார அமைப்புகள் சமூகத்தினை தன் வலிமையான கட்டுப்பாட்டில்

வைக்கத்தான்" என்கிறார். பூக்கோவின் இக்கருத்து, ஆட்சியாளர்களின் நலன் கருதியே இனவரைவியல்களும், வரலாறுகளும் எழுதப்பட்டன என்பது காலனி ஆட்சி காலம் மட்டுமின்றி இன்றும் பொருந்தும்.

பின் நவீனத்துவம் குறித்து இரண்டு வகையான கருத்துகள் நிலவுகின்றன. ஒரு சாரார் இது ஒரு தற்காலிகப் போக்கு எனவும் மற்றொரு சாரார் இது நீண்டகாலம் நீடிக்கக் கூடிய ஒரு சிந்தனை போக்கு எனவும் கருதுகின்றனர். அறிவியல் என்பது தொடர் சட்டக மாற்றம் (paradigm shift) என்கிற பொது விதிமுறைக்கு உட்பட்டே இயங்கி வந்திருக்கிறது. ஒரு குறிப்பிட்ட காலச் சூழலில் குறிப்பிட்ட அறிவுச் சட்டகம் கோட்பாடாக ஏற்கப்படும் அல்லது பயன்பாட்டில் இருக்கும். ஆனால் காலபோக்கில் இது விமர்சனங்களுக்குள்ளாகி அடுத்து புது சட்டகம் இடம்பெறும். அது போலத்தான் பின் நவீனத்துவமும் என்று கொள்வோமானாலும், இன்றையச் சூழலில் இச்சிந்தனைப் போக்கினால் இனவரைவியல் எழுத்துக்கள் உண்மையை நோக்கிய நகர்வில் மேலும் முன்னேறுவதற்கு வழி வகுத்தது எனலாம்.

**இனவரைவியலின் அண்மைக்கால வளர்ச்சிகள்**

அண்மைக்காலங்களில் உற்பத்தி மற்றும் மேலாண்மைத்துறைகளில் இனவரைவியல் ஆய்வு அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது, வடிவமைப்பு இனவரைவியல் (design ethnography) என்று வளர்ச்சி அடைந்திருக்கிறது. வடிவமைப்பு இனவரைவியல் அடிப்படையில் ஒரு ஆய்வு முறையாக களஆய்வில் இனவரைவியல் கருத்துக்கள், ஆய்வுமுறைகளை பயன்படுத்தி சமூகத்தின் இயல்பானச் சூழலில் மனித நடத்தைகள், தேவைகள் குறித்து வார்த்தைகளில் சொல்லியது, சொல்லாதது, உள்ளுணர்வில் இருப்பது இவற்றை அறிந்து ஆழமான, நுண்மையானப் புரிதலுடன் நன்கு பயனுறும் வகையில் பொருட்கள் (products), சேவைகள் (services), அமைப்புகள் (systems) வடிவைமைக்கப் பயன்படுத்தப்படுகிறது.

நவீன தகவல் தொழில்நுட்பத்தின் அசுர வளர்ச்சி அதன் விளைவாக கணினி, மெய்நிகருலகு, இணையதளங்கள், சமூக ஊடகங்கள் என நடப்புக்காலத்தில் மனித சமூகத்தினை புரட்டிப்

போட்டுக்கொண்டிருக்கிறது. மனிதர்கள் மெய்நிகருலகில் செலவிடும் நேரம் கூடிக்கொண்டே செல்கிறது, நிஜ உலகம் போலவே இங்கேயும் மெய்நிகர் சமூகங்களும், குழுக்களும் உருவாகின்றன, உயிர்ப்புடன் செயல்படுகின்றன. மெய்நிகர் இனவரைவியல் (virtual ethnography) மரபான இனவரைவியல் ஆய்வு முறைகளை பயன்படுத்தி மெய்நிகர் உலகின் சமூகங்கள், வெவ்வேறு வகையான தளங்களில், ஊடகங்களில் பங்கேற்கும் மனிதர்களுக்கிடையிலான தொடர்புகளை, உறவுகளை அவர்களின் நடத்தைகளை ஆய்வு செய்வது. இதில் மனிதர்களுக்கு இடையிலான உரையாடல்கள் ஒரு யதார்த்த உலகில் நிகழ்வது போல் நேருக்கு நேர் நடைபெறாது, மாறாக கணினி தொழில்நுட்பம் அமைத்துத்தரும் மெய்நிகர் மேடைகளில் நடைபெறும். இனவரைவியல் கட்டமைக்க தரவுகள் உரை, ஒளி - ஒலி ஊடகங்கள் என பல்வகை ஆதாரங்களில் இருந்து சேகரிக்கப்படுகிறது.

இங்கே முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு தகவல், இந்த மெய்நிகருலகில் - ஆய்வாளர் பயணமின்றி ஆனால் தொலைவு கடந்து தன் இருப்பை உணர்கிறான். மெய்நிகருலகில் பங்கேற்போர் சிலவற்றைப் பகிர்வர், சிலவற்றைத் தவிர்ப்பர், சிலவற்றை இத்தளத்தில் பகிரவே உருவாக்குவர், சிலருக்கு உங்கள் தகவல் அறிய, கேட்டுப்பெற அனுமதி உண்டு சிலருக்கு அனுமதி மறுக்கப்படும். இந்தச் சூழலில் தான் இனவரைவியல் தகவல்களும் சேகரிக்கப்பட்ட வேண்டியுள்ளது. நிஜ உலகில் களத்தில் இனவிரைவியல் தகவல்கள் சேகரிக்கும்போதும் இது போன்ற இடையூருகள் இருக்கும் எனினும் நிஜ உலககின் ஆய்வுக்களத்தைவிட மெய்நிகருலகில் ஆய்வாளன் தகவலாளிகளுடன் உரையாடுவதற்கும், செயல்பாடுகளை கண்டுணர்ந்து தகவல்கள் சேகரிப்பதற்காக வாய்ப்புகள் சுருங்கி இருக்கும்.

புதிய வளர்ச்சியில் உருவான இந்த இரண்டு இனவரைவியல் ஆய்வு முறைகளுமே பொதுவாக பல்துறை ஒருங்கிணைவு ஆய்வு (Inter disciplinary approach) அணுகுமுறையில் பல்துறை அறிஞர்களின் கூட்டு முயற்சியாக களத்தில் பயன்படுத்தப்படுகிறதது.

## இனவரைவியலின் தேவையும் பயனும்

சமூகங்கள், சமூகப்பண்பாடுகளுக்கிடையே பல வழிவகைகளில் மேன்மேலும் தொடர்புகள்(உண்மை மற்றும் மெய்நிகர்) பெருகி வரும், பல தளங்களில் தவிர்க்கவியலாது இணைந்து செயலாற்ற வேண்டியிருக்கும் இன்றைய உலகச் சூழலில் - இனவரைவியல் ஒரு குறிப்பிட்ட சமூகம், அதன் பண்பாட்டுக்கூறுகள் குறித்து ஆழமான புரிதல்கள் பெற உதவும். அச்சமூக மக்களின் நடத்தைகள் குறித்து ஒன்றிணைந்து உணரும் (empathy) வாய்ப்பினை உருவாக்கித் தரும். மேலும் வேறுபாடுகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம், சகிப்புத்தன்மை, அச் சமூக மக்களுடன் எவ்வாறு ஒன்றிணைந்து பயணிப்பது போன்ற பண்புகளை சமூகங்களுக்கிடையே பேணி வளர்க்க உதவும். இவைகள் தவிர முக்கியமாக ஒருவர் குறிப்பிட்ட ஒரு சமூகம் அதன் அமைப்பு, நடைமுறைகள், மக்களின் நடத்தைகள் பற்றி போதிய சுய அனுபவமின்மையின் காரணமாகக் கொண்டிருக்குக்கும் சில தவறான அனுமானங்களைக் களைய உதவும். பண்பாட்டுப் பன்மையம் பதிவு செய்யப்படும், கட்டுரையின் துவக்கத்தில் கூறியது போல பண்பாட்டுப் பன்மையத்தினைக் காக்கும் உலகமாக உறுதிசெய்வதற்கு உதவும்.

## இறுதியுரை

இனவரைவியல் சமூக மானிடவியலின் முக்கிய கருத்தாக்கங்களில் ஒன்று. இனவரைவியல் ஆய்வு, இனவரைவியல் எழுதுவது பண்பாட்டு பன்மையத்தை புரிந்துகொள்வதற்கு, போற்றுவதற்கு, காப்பதற்கு ஒரு சிறந்த முறை. குறிப்பாக பண்பாட்டு பன்மையம் சமூகங்களின் பண்பாட்டுத் தனித்துவத்தை அறிந்துகொள்ள உதவும்.

இனவரைவியல் ஒரு சமூகத்தின் பண்பாடு குறித்த உண்மை சூழலுக்கு அருகில் கொண்டு செல்லும் சமூகப் பிரதி. இனவரைவியல் எழுதுவதற்கு மிக மிக முக்கியமானது, முறைப்படியான, தரமான களஆய்வு. பண்பாட்டின் அனைத்து கூறுகளையும் உள்ளடக்கி போதிய அளவிலான தரவுகளை சேகரிப்பது, சரிபார்ப்பது, பகுப்பாய்வு செய்து விளக்கவுரைகள் எழுதுவது. இது ஆய்வுக்களம் தேர்ந்த்தெடுப்பதில் தொடங்கி உரையாக்கம் என முடிவினை

அடையும் வரை வரை நிகழும் தீவிரச் செயல்பாடு.

நேரடிக் களஆய்வின் மூலம் உருவாகும் விரிவான விளக்கவுரை அந்தக் குறிப்பிட்ட சமூகத்தின் தனித்துவங்கள் பதிவுசெய்யப்படும். வெவ்வேறு சமூகங்களின் இனவரைவியல்களின் ஒப்பீட்டு ஆய்வு சமூகங்களுக்கிடையிலான பொதுமைகளைக் கண்டறிந்து வகைமைப்படுத்தவும் அடுத்த அளவில் கோட்பாட்டாக்கதிற்கான வாய்ப்புகளையும் உருவாக்கும்.

மாறிவரும் காலச்சூழலுக்கேற்ப இனவரைவியல் புதிய கருத்துக்களை உருவாக்கி அல்லது பிற அறிவுப்புலங்களிலிருந்து உள்வாங்கி, புதிய தளங்களில் ஊடுருவி, புதிய வடிவங்கள் ஆய்வுமுறைகள் என வளர்ந்து கொண்டிருக்கிறது.

தமிழில் இதுவரை வெளிவந்துள்ள இனவரைவியல் நூல்களை மதிப்பிடுகையில் தமிழ் ஆய்வாளர்கள் பயணப்பட வேண்டியது வெகுதூரம் எனத்தெரிகிறது, இது எண்ணிக்கையில் மட்டுமல்ல, தரத்தினையும் சேர்த்தே கூற வேண்டியுள்ளது. இனவரைவியல் என்கிற கருத்தாக்கம் பற்றிய தெளிவு, ஆழமான ஈடுபாடுடனான களஆய்வு, முழுமையான விவரிப்புகளுடனான உரையாக்கம் என இவைகளில் சீரிய முயற்சிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியம். இம்முயற்சிகள் வரும் காலங்களில் தமிழ் பண்பாட்டுச் சூழலை புரிந்து கொள்வதற்கான கருத்தாக்கங்களையும், கோட்பாட்டையும் வளர்த்தெடுக்க வழி வகுக்கும்.

## References


- *ராசேந்திரன், மா 2014. மெக்கன்சி சுவடிகளில் தமிழகப் பழங்குடி மக்கள், அடையாளம், திருச்சி*
- Berger, P. 2012 'Theory and ethnography in the modern anthropology of India' in Journal of Human Ethnographic Theory 2 (2): 325 -57
- Foucault, M. 1980. Power/Knowledge: Selected interviews and other writings, Ed. Colin Gordon, Pantheon books, Newyork
- Geertz, C. 1973. Interpretation of Cultures, New York, Basic Books
- Ghurye, G. S. (1963). The Scheduled Tribes. Bombay: Popular Prakashan
- Malinowski, B. 1992. Argonauts of The Western Pacific: An Account of Native Enterprise and Adventure in the Archipelagoes of Melanesian New Quinea, London, Rutledge
- Rad cliff – Brown, A.R. 1931. The Social Organization of Australian Tribe, MacMillan & Co. Limited, Melbourne
- Tim Ingold. 2008. Anthropology is not Ethnography, Radcliffe – Brown Lecture in Social Anthropology
- Radcliff – Brown Lecture in Social Anthropology, Proceedings of the British Academy, 154, 69–92. The British Academy 2008. Accessed on 15 June 2025 https://www.thebritishacademy.ac.uk/documents/2051/pba154p069.pdf
- Tripura B (2023) Decolonizing Ethnography and Tribes in India: Toward an alternative methodology. Front.Polit.Sci. 5:1047276. Doi: 10.3389/fpos.2023.1047276

# இணைப்பு 1

மேலைநாட்டு மானிடவியலாளர்களின் தமிழ் சமூகங்கள் குறித்த இனவரைவியல் பங்களிப்புகள்

| | | |
|---|---|---|
| எரென்பில்ஸ்<br>U.R. Erhenfels | காடர் - பழங்குடிகள்<br>மேற்குத்தொடர்ச்சிமலை- இனவரைவியல்<br>Kadars of Westerghats – Ethnography | *1952* |
| டபிள்யு.ஹெச். ஆர். ரிவர்ஸ்<br>W.H.R. Rivers | தொதுவர்கள் – பழங்குடிகள் - இனவரைவியல்<br>Todas of the Nilgiris – Ethnography | *1906* |
| பிரையன் மோரிஸ்<br>Brian Moris | மலப்பண்டாரம் – பழங்குடிகள் - இனவரைவியல்<br>Forest Traders: A Socio – Economic study of the Hill Pandaram | *1982* |
| கார்டினர்<br>Gardiner | பளியன் – பழங்குடிகள்<br>Paliyars | |
| ப்ரெண்டா இ. எப். பெக்<br>Brenda EF Beck | கொங்கு பகுதி வேளாண் சமூகம் - இனவரைவியல்<br>Peasant Society in Kongu | *1972* |
| அந்தோணி கூட்<br>Anthony GOOD | திராவிட உறவுவழிமுறை - இனவரைவியல்<br>Worship and the Ceremonial Economy of a Royal South Indian Temple | *2004* |
| பால் ஹாக்கிங்ஸ்<br>Pual Hockings | நீலகிரி படகர்கள் - இனவரைவியல்<br>Ancient Hindu Refugees | *1980* |
| கமில் ஸ்வெலபில்<br>Kamil V Zvelebil | நீலகிரி இருளர்கள் - இனவரைவியல்<br>The Irulas of the Blue mountains | *1988* |
| லூயி டுமாண்ட்<br>Louis Dumont | பிறமலை கள்ளர் - இனவரைவியல்<br>Piramalai Kallar - A south Indian sub caste | *1986* |
| நுரிட் பர்ட் டேவிட்<br>Nurit Bird David | கட்டுநாயக்கன் – நீலகிரி - ஆய்வுக்கட்டுரைகள்<br>Kattunaiken (The Nigiris) | *1987* |
| அந்தோணி ஆர். வாக்கர்<br>Antony R.Walker | தென் இந்தியாவில் வசிக்கும் தொதுவர்கள்: புதிய ஒரு பார்வை - இனவரைவியல்<br>The Toda of South India: A New Look | *1986* |

| | | |
|---|---|---|
| சி. ஜெ. புல்லர்<br>C.J.Fuller | இறைவியின் (தேவியின்) பணியாட்கள்: தென் இந்திய கோவில் ஒன்றின் அர்ச்சகர்கள் – இனவரைவியல்<br>Servants of the Goddess: The Priests of a Sounth Indian Temple | *1984* |
| உல்ரிக் டெம்மெர்<br>Ulric Demmor | நீலகிரி மலை ஜேனு குறும்பாஸ் – இனவரைவியல்<br>Jenukurumbas of the Nilgirs<br>Towards Another Reason | *2016* |
| மார்கரெட் ஜெனே ட்ராவிக்<br>Margaret Jane Trawick | தமிழ் குடும்ப பாசம் பற்றிய குறிப்புகள்<br>Notes on love in a Tamil family | *1990* |
| ரிச்சர்ட் உல்ப்<br>Richard Wolf | நீலகிரி கோத்தர்கள் – இனவரைவியல்<br>Black cow's foot print – Time, space and music in the lives of the Kotas of South India | *2006* |
| கிறிஸ்டெர் நோர்ஸ்ட்ரோம்<br>Christer Norstrom | பலியர் – பழனிமலை தொடர்ச்சி – இனவரைவியல்<br>They call for us: Strategies for Securing Autonomy Among the Paliyans, Huter – Gatherers of Palni Hills, South India | *2003* |
| கீர்த் தே நெவ்<br>Geert De Neve | நூற்பாலை தொழிலாளிகள் பவானி திருப்பூர் – இனவரைவியல்<br>The Everyday Politics of Labour: working lives in India's Informal Economy | *2005* |
| அயாகோ இவதானி<br>Ayako Iwatani | நரிக்குறவர் வாகரிஸ் – ஆய்வுக்கட்டுரைகள்<br>Narikurawars – Vagaris | *2009* |
| யுகோ நிஷிமுரா<br>Yuko Nishimura | நகரத்தார் வணிக சமூகம் – இனவரைவியல்<br>Nagarathar – Mercantile caste – Ethnography | *1998* |

## இணைப்பு 2

| | | |
|---|---|---|
| சி. மகேஸ்வரன் | பச்சைமலை மலையாளி பழங்குடியினரின் இனவரைவு | 2007 |
| நடைபார் | கல்வராயன் மலை பழங்குடிகளின் இனவரைவியல் | |
| அனந்தபுரம் கிருஷ்ணமூர்த்தி | கல்வராயன் மலையாளிகள் | 1992 |
| கோ. சீனிவாச வர்மா | நரிக்குறவ பழங்குடி மக்கள் | 1978 |
| கரசூர் பத்மாவதி | நரிக்குறவர் இனவரைவியல் | 2004 |
| ஆர்.கோவிந்தராஜன் | ஜவ்வாது மலையில் தொல் தமிழ் பண்பாடு | 2023 |
| மணி கோ. பன்னீர் செல்வம் | தொன்முதுகுறவர் | 2019 |
| செங்கோ | இருளர் இனவரைவியல் | - |
| ஆர். பெரியாழ்வார் | இருளர் வாழ்வியல் | 1976 |
| ஊராளன் சே.ச.(பிலிப்குமார்) | ஊராளி பழங்குடியினர் வாழ்வியல் | 2021 |
| அ.பகத்சிங் | சோளகர் - வாழ்வும் பண்பாடும் | 2014 |
| க.முத்து இலக்குமி | முதுவர் வாழ்வியல் | 2018 |
| த.விஜயலட்சுமி | இருளர் பழங்குடிகளின் மருத்துவம் | 2014 |
| விஜயலட்சுமி | இரவாளர் பழங்குடிகள் | - |
| மு.அன்னகாமு | மேல் பழனி மலைப் பழங்குடிகள் | - |
| சுந்தர வந்தியத்தேவன் | பிறமலைக் கள்ளர்:வாழ்வும் வரலாறும் | 2011 |